Phone No 4502 Regd. No. M. 5458

விலை அரை அணு இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (8—5—50) வெளியூர் (9—5—50) [இதழ் 246

உருப்படாதத் திட்டங்களால் உற்பத்திப் பெருகிடுமா?

உழைப்பாளிகள் உள்ளத்தில் நம்பிக்கை வித்து ஊன்றுக!

இளைஞர் உலகிற்கு இதோபதேசமேன்?

—(0)—

விவசாயிகளின் வேதனையை போக்கிட வாரீர்!

—(0)—

அமைச்சர்குமாரசாமியார்பேச்சுபற்றிய ஆய்வுரை

"இளம் ஆடவரும் பெண்டிரும், சிறு சிறு குழுவினராகக் கிராமங்களுக்குச் செல்லவேண்டும். சென்று, சிறு வெளியீடுகள் வெளியிடுதல் மூலமும், சுவரொட்டிகள் மூலமும், படக் காட்சிகள் மூலமும் உணவு உற்பத்திக்கான பிரசாரத்தை மக்களிடையே நடத்தவேண்டும். உணவை மிச்சப்படுத்துவது எப்படி என்பது பற்றியும் பிரசாரம் செய்யவேண்டும்.

பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களும், கைத்தொழிற்கலைக்கூட மாணவர்களும் இப் பணியில் ஈடுபடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். தொழிற்சாலையில் வேலைபார்க்கும் இளைஞர்களும் இதில் பங்குகொள்ளவேண்டும். பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை இந்த உற்பத்தி இயக்கத்தில் ஈடுபடும்படி செய்யவேண்டும்.

இளைஞர்கள் இப்படிச் செய்தால், இந்த இயக்கம் தீவிரமாக முன்னேறும். சுய தேவையைப் பூர்த்திசெய்துகொள்ளும் திட்டத்தில் நாம் வெற்றிபெறலாம்"

உணவுப் பொருள் உற்பத்தி செய்யும் மார்க்கத்தைக் காட்டும் முகத்தான், சென்னை முதலமைச்சர் தோழர் குமாரசாமி ராஜா அவர்கள் செய் [illegible] துக் காட்ட [illegible]

"உற்பத்தியைப் பெருக்குங்கள்—உற்பத்தியைப் பெருக்குங்கள்" என்று உரத்த குரலிலே பொதுவாக பொது மக்களிடையே பேசினர் சில காலம்!

சென்னை போன்ற நகரங்களில் ஜிம்கானா போன்ற, காற்றோட்டத்திற்காக நடமாடும் திறந்த வெளிகளில் பயிர்விளைத்துக் காட்டினர் சில காலம்!

ஆச்சாரியார் போன்ற 'பெரும்தலைகள்' ஏர் பிடிக்கும் காட்சியை அழகுறப்படம் பிடித்துக் காட்டினர் சில காலம்!

இவை அனைத்தும் ஒருபுறமிருக்க, உணவுஉற்பத்தியைப் பற்றி எழுதாத ஏடுகள் இல்லை. தீட்டாத ஓவியங்கள் இல்லை. ஓயாது ஒலி பரப்பாத வானொலிகள் கிடையாது. இவை அனைத்தும் போதாதென்று கட்சிப் பிரசாரத்துக்காக மேடைமீது ஏறுகிற தலைவர்களெல்லாம் எதை மறந்தாலும் மறப்பார்கள் உற்பத்திப் பெருக்கம் பற்றிப் பேச மறப்பதில்லை!

இங்ஙனம்மண்ணிலும்விண்ணிலும், ஏட்டிலும், பேச்சிலும், எழுத்திலும் உற்பத்திப் பெருக்கப் பிரசாரம் செய்து பார்த்துவிட்டு, இப்பொழுது இளைஞர்களை அனுகிப்பார்க்கின்றனர் ஆட்சியாளர். பள்ளி மாணவர்கள் முதற்கொண்டு தொழிற்சாலையில் இருக்கும் இளைஞர்கள் வரை தட்டிக் கொடுக்கின்றனர்.

இளைஞரெல்லாம் கிராமத்துக்குப் போகவேண்டுமாம்; துண்டுப் பிரசுரங்களை வீச வேண்டுமாம்; சுவரொட்டிகள் தேவையாம்; படக் காட்சிகள் வேண்டுமாம்: வெளியீடுகள் [illegible]

நோயாளியைப் பார்த்து "ஏனப்பா ஜாதகப் பலனைப் பார்த்தாயா" என்று கேட்கிருர் ஒரு ஜோதிடர்.

'ஐயனுருக்குப் பூஜைபோடுவதாக வேண்டிகொள்வது தானே' என்கிருர் கோவில் பூசாரி.

"எங்கேயோ கழிப்பை மிதித்து விட்டாய்போலிருக்கிறது. மந்திரித்து தாயத்து கட்டிப் பார்ப்பது தானே" என்கிருர் மாந்திரீகர்.

இது நாட்டிலே நடப்பது. ஆனால் அறிவுலகம் ஏற்றுக்கொள்ளாதவிஷயம். 'நோயா, அப்படியானல் மருத்துவரிடம் செல்' என்று கூறுபவனே அறிவுடையோன். அவன் சொல்லைக் கேட்டு மருத்துவரை அணுகுபவனே நோய் நீங்கப் பெறுவான். இதை விடுத்து சோதிடம், மாந்திரீகம், பேய், பூதம் முதலியவற்றை நம்பினுர் நாசமாவதைத் தவிர்த்து, வேறு ஒன்றும் காண முடியாது. இது உடல் நிலைபற்றி வரை நாம காணும் உண்மை.

இங்ஙனமே நாட்டு நிலையையும் ஆராய்ந்து பார்த்தால், வறுமையையும், பஞ்சத்தையும் ஓட்டவல்ல உணவு உற்பத்திக்கு உழைப்பே இன்றியமையாததென்பதும், அதற்கு உழைப்பாளிகளே தேவை என்பதும் தெரிய வருகிறது

உழவுத் தொழில் உழைப்பை அடிப்படையாகக் கொண்டது. 'உழவு' என்பது 'உழைப்பு' என்னும் சொல

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க)

இலங்கையில் உலக பௌத்தமத மாநாடு

—(0)—

அம்பேத்காரும் பங்குகொள்வார்?

புதுடில்லி, மே 7—
கொழும்புவில் மே. 26வ யன்று நடைபெற விருக்கும் உலக பௌத்தமத மாநாட்டில், இந்தியாவின் சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார் கலந்துகொள்ளலாம் என்று கூறப்படுகிறது.

இம் மாநாட்டில் பிரிட்டன், யுனைடெட் ஸ்டேட்ஸ், ஜெர்மனி, பிரான்ஸ், நார்வே, ஜெக்கோஸ்லவாகியா, ஹவாய் [illegible] பர்மா, ஸயாம் ஆகிய நாடுகளின் [illegible] கலந்துக் கொள்வர்.

முதல் நாள் நடவடிக்கைக்கு இலங்கை பிரதம மந்திரி தோழர் சேனநாயகா தலைமை வகிப்பார்.

மகான் புத்தருடைய சின்னமான பற்கள், மாநாட்டின் போது தரிசனத்திற்குவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பர்மாவில் 10 லக்ஷம் குஷ்டரோகிகள்

ரங்கூன், மே 7—
பர்மாவில் 10 லக்ஷம் குஷ்டரோகிகள் இருப்பதாக இவ்விஷயமாக கவனிக்க நியமிக்கப்பட்டுள்ள விசேஷ அதிகாரி அறிவித்திருக்கிருர். —ராய்ட்டர்

சயாம் யுத்தக் கடன்கள்

லண்டன், மே 7—
சயாம் யுத்தக் கடன்களைத் திருப்பிக்கொடுப்பது விஷயமாக 1947-ம் ஆண்டு முதற் கொண்டு நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள், சீக்கிரமே முடிவடைந்து ஒரு முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது. காமன்வெல்த் நாடுகளுக்கு யுத்தக் கடன் திருப்பித்தரப்படுகையில் இந்தியாவுக்கு ரூ. 13 லக்ஷம் கிடைக்கும். (ராய்ட்டர்)

லண்டன், மே 7—
ருமேனியா மாஜி மன்னர் கரோலும், அவர் மனைவியும் போர்ச்சுகலிலிருந்து லண்டன் வந்து சேர்ந்திருக்கின்றனர். —ராய்ட்டர்

பிரிட்டனுக்கு பந்தயம் மூலம் 2½ கோடி பவுன்

லண்டன், மே 7—
சென்ற வருடம் பந்தயத்தின் மூலம் 2 1/2 கோடி பவுனுக்கு பிரிட்டிஷ் சர்க்காருக்கு வருமானம் கிடைத்திருக்கிறது.

கம்யூனிசத்தை ஒழிக்க கச்சை வரிந்து கட்டுகிருர் அக்கீஸன்

—(0)—

உறுதியுடன் போராட முன்வர வேண்டுமென உபதேசம்!

—(0)—

அமெரிக்க முதலாளித்வத்தின் அர்த்தமற்ற "சவால்!"

"உலகத்தில் சிதறிக் கிடக்கும் லட்சியங்களை ஒன்று சேர்த்து, அவற்றை நமது முழுபலங்கொண்டு உருப்படுத்த வேண்டும். சர்வதேச கம்யூனிசம் இப்பணியைச் செய்யாவிட்டால் கூட, நாம் இதனைச் செய்தாக வேண்டும்."

"உலகைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும்கம்யூனிசத்தை எதிர்த்துப் போராட கிழக்கு நாடுகள் தம்முடைய சக்திகளனைத்தையும் ஒன்று திரட்டி அணிவகுத்து நிற்கவேண்டும்"

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் செயலாளர் தோழர் டீன் அகிசன், லண்டனில் நடைபெறவிருக்கும் ராஜதந்திரிகள் மாநாட்டிற்குப் புறப்படும் தருவாயில்,ஓர் அறிக்கை மூலம் வெளியிட்டுள்ள கருத்துகள் தாம் மேலே தரப்பட்டிருப்பவை.

முதலாளித்வ நாடுகளின் தலைமை நிலயத்தைச் சேர்ந்த செயலாளர் கம்யூனிசத்தை ஒழித்துக்கட்ட கச்சை வரிந்து கட்டிக்கொண்டு ஐரோப்பாவிலே பவனி வரவும் ஆரம்பித்துவிட்டார். அவர் பவனி வர ஆரம்பிக்கு முன், அவர் விடுத்துள்ள செய்தி, அகில உலகையும் பவனி வருகிறது! குறிப்பாக லட்சியவாதிகளின் உள்ளத்திலே பவனி வர ஆரம்பித்துவிட்டதுஎனலாம். நல்ல லட்சியங்களைத் திரட்டி பலப்படுத்தி, பக்குவப்படுத்தும் பணியை மேற்கொள்ளப் போகிருராம். முதலாளித்வத்தின் முன்னேடும் பிள்ளை தோழர் அக்கீசன். எப்படி? கம்யூனிசத்துக்கு சவால் விடுத்துக்கொண்டு!

கம்யூனிசம் உலகைப் பயமுறுத்துகிறதாம். அதனை எதிர்க்க சக்திகள் திரளவேண்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

சர்வதேச தபால் யூனியன் மாநாடு

புதுடில்லி, மே 7—
மாண்ட்ரூக்ஸில் மே 15-ந் தேதி நடைபெறவிருக்கும் சர்வதேச தபால் யூனியன்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக, இந்தியாவின் பிரதிநிதி தந்தி தபால் இலாகா ஸீனியர் டெபுடி டைரக்டர் ஜெனரல் தோழர் ஜே. எல். ஜிராத் இந்தியாவைவிட்டு புறப்பட்டிருக்கிருர்.

உலகிலுள்ள எல்லாத் தபால் நிர்வாக ஸ்தாபனங்களும் தேர்ந்தெடுத்த 19 நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

இம்மாநாட்டின் முந்திய செஷன் 1947-ல் பாரிஸில் நடைபெற்றது. அடுத்த செஷன் பிரஸ்ஸல்ஸில் 1952-ல் நடைபெறும்.

புத்த சின்னங்கள்

ரங்கூன், மே 7—
பர்மாவுக்கு அனுப்பப்பட்ட புத்த சின்னங்கள் (மே 7) இன்று இலங்கையில் திரும்பி வந்து சேருகிறது.

இவை 'வார் விக்ஷயர்' கப்பல் மூலம் வந்து சேருகின்றன,

மாலை மணி

சென்னை 8—5—50 திங்கட்கிழமை

இந்தோனேஷியாவில் சுதந்திரக் கிளர்ச்சி

"இந்திய உபகண்டம், பல துண்டுகளாலானஒரு கோளம். பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் என்னும் பட்டு நாடா, அத்துண்டுகளையெல்லாம் ஒன்ருக இணைத்துப் பிடித்துக்கொண்டுள்ளது. நாடா எடுபட்டு விட்டால், கோளம் பல துண்டுகளாகச் சிதறிவிடும்" என்று கூறினர் பேரறிஞர் எச். ஜி. வெல்ஸ், இதை எச். ஜி. வெல்ஸ் மட்டுமென்ன, இந்திய உபகண்டத்தின் வரலாற்றை அறிந்துகொள்ளச் சிறிது சிரமம் எடுத்துக் கொண்டவர்கூட கூற முடியும். கூறியவர் ஒரு வெள்ளையன் என்ற காரணத்தால், அவர் ஒரு பேரறிஞர் என்பதைக்கூட மறந்து அன்று பண்டித நேரு வெகுண்டு கூறினர்; "மட்டபுத்தி படைத்தவர். மடத்தனமாகக் கூறுகிருர்" என்று எச். ஜி. வெல்ஸ் கூறிய இரண்டே ஆண்டுகளில் பாக்கிஸ்தான் தோன்றிற்று, அறிஞரின் சொல்லையும் மெய்ப்பித்தது.

இன்றுள்ள இந்தியாவின் நிலை, வெள்ளையர், கஙிப்பரிடம் கொடுத்துச் சென்ற ஏகாதிபத்ய நாடா வேகமாகத் தேய்ந்துவருகிறது, அறுந்துவிடும் என்று எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. இன்பத்திராவிடம் தனிநாடாக முரசு கொட்ட ஆரம்பித்துவிட்டது; வங்காளம் இரும்புத்தலைகளையே திகைக்க வைத்திருக்கிறது; மராட்டியம், மார்தட்ட ஆரம்பித்துவிட்டது. இவ்வளவும் ஒரே கடற்கரை ள்ள நிலப்பகுதியின் பிரிவுகளாக இருந்துகொண்டு!

இந்தோனேஷியா அப்படிப்பட்ட ஒரு நாடு அல்ல, திராவிடத்துடன் பண்டைக்காலந் தொட்டு வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்த சாவகம், சுமத்திரா, போர்னியோ மதுரை ஆகிய தனித் தீவுகள் உள்ளிட நானூறு தீவுகள் கொண்டதே இந்தோனேஷியா. ஒவ்வொன்ருக அடித்துப்பிடித்துக் கொண்டு, ஆட்சியை வசதியுடன் நடத்த ஒரே ஒரு சர்க்கார் ஏற்படுத்திற்று சுமார் இருநூறு ஆண்டுகள் ஆட்சி செய்து சில மாதங்களுக்கு முன்புதான் வெளியேறிய டச்சு சர்க்கார் சுகர்ணு தலைமையில் தோழர் ஹட்டாவைப் பிரதமராகக் கொண்ட சர்க்காரிடம் ஒப்படைத்துச் சென்றது.

ஆதிக்க வெறி மனிதனை எளிதில் பிடித்து ஆட்டுகிறது; அழிவுக் காலம் அணைத்துக் கொண்டாலொழிய, அவன் அதை உணருவதில்லை; அதே நிலைதான் இன்று இந்தோனேஷியாவில், ஹட்டாவின் விரல் ஆடினல் நாட்டில் அவ்வளவு பேரும் அடவேண்டும் என்னும் போக்கில், குடியரசு சர்க்கார் அமைக்கப்பட்டுள்ளது. மக்கள் இதை விரும்பவில்லை. சாவகம் தனி நாடாக வேண்டும்; சுமத்திரா தீவின் மக்கள் சுயேச்சையாக இருக்க வேண்டும்; ஆனல் அவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுசர்க்கார்சமஷ்டி சர்க்கார் வேண்டுமானல் அமைத்துக் கொள்ளட்டும்; இதற்கு அதிகாரங்கள் எண்ணிறந்து இருக்கக் கூடாது என்று கூறினர்கள். ஏன், இவர்கள் மட்டுமென்ன சுயேச்சை மனம் படைத்த தனித்து வாழமுடியும் எந்த நாட்டு மக்களும் அவ்வாறு தான் சொல்லுவார்கள். ஆனல் சுகர்ணு இதை உணர மறுத்தார் ஹட்டா அலட்சியம் செய்தார். ஒரே நாடு, ஒரே சர்க்காராக இருக்க வேண்டுமென்று அவர்கள் அதிகாரம் பெற்ற காரணத்தால், அறிவித்துவிட்டார்கள் அடிபணிய மறுப்பவர்கள் துப்பாக்கி முனையில் நிற்க வேண்டுமென்று பயமுறுத்தப்பட்டார்கள்.

தொடர்பற்ற பல தீவுகள்; சாவகத்திலிருந்து சுமத்திராவுக்குக் கடல்கடந்து செல்ல வேண்டும்; எளிதான காரியமல்ல. எண்ணிக்கூடப் பார்க்காமல் சமஷ்டி சர்க்கார் திட்டத்தை ஏற்க மறுத்துவிட்டார் தலைவர் சுகர்ணு, பிரதமர் ஹட்டா, இன்றுநாம் கேள்விப்படுவது என்ன ?

"மக்காசாரில் கலகம்; குடியரசுப் படைகள் சிறைபிடிக்கப்பட்டன; கலகக்காரர்களுக்கு உதவி செய்தாரென்ற சந்தேகத்தின் பேரில், குடியரசு சர்க்கார் மந்திரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்"

"கிழக்கு இந்தோனேஷியாவில் புரட்சி செய்த தோழர் அஜிஸ், ஏன் சர்க்காரைக் கைப்பற்றினரென்பதை நேரில் விளக்க ஜகார்த்தாவுக்கு வருகிருர்.

இதுபோன்ற செய்திகள் இதுவரை கிடைத்து வந்தன. ஆனல் இப்பொழுது கிடைத்துள்ள செய்தி, "தென் மொலுக்கஸ் சர்க்கார் இந்தோனேஷியக் குடியரசு சர்க்காருக்குப் பணிய மறுத்து, தென் மொலுக்கஸ் சுதந்திரக் குடியரசு நிருவிக்கொண்டது" என்பதாகும் இந்தச் செய்தி "வடநாட்டுச் சர்க்காரின் ஏகாதிபத்யத்துக்குப் பணிய மறுத்து, சுயேச்சைக் குடியரசாக சென்னை சர்க்கார் பிரகடனப்படுத்திவிட்டது" என்று கூறுவதற்குச் சிறிதும் மாருனதல்ல. ஒரு சிலர்—ஆதிக்க வெறியர்கள் செய்கையல்ல, ஒரு மாவட்ட சர்க்கார் சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளது. எதிர்த்து நிற்க முடியாது, தனித்தியங்க முடியாது, என்று மொலுக்கஸ் அரசாங்கம் கருதியிருந்தால், அவ்வளவு எளிதில் சுதந்திரப் பிரகடனம் செய்திருக்காது.

இந்தோனேஷியக் குடியரசின் பலம்பொருந்திய படை மொல்லுக்கஸ் ஆட்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது; அதனல் அங்க போர் செய்ய ஆள் பஞ்சம் இருக்காது. இந்தப் பயத்தால் தான் முற்றுகையிட்டுள்ளது ஹட்டா சர்க்கார். அரிசி கிடைக்காவிட்டாலும் மீனும், சவ்வரிசியும் உண்டு மக்கள் முற்றுகையைச் சமாளிப்பார்கள் என்று பலர் கருதுகிருர்கள்.

விஷ[illegible] வே[illegible] சர்[illegible]சரிக்கிருேம், வெள்ளையர் ஆட்சிக்கு முன் இந்தோனேஷியா ஒரு நாடாக இருந்ததில்லை; என்பதை வரலாறு கூறுகிறது. இனியும் இருக்க முடியாது என்று, பூகோளம் தெளிவாக்குகிறது. அதையால் அவசரப்பட்டு மக்களை ஆத்திரப்படுத்திவிடுமுன், கூட்டு சர்க்கார்-சமஷ்டி சர்க்கார், ஏற்படுத்துவதே சிறந்ததென்று கூறுகிருேம். இல்லையேல் சாவகம் தனித்துவிடும், சுமத்திரா சுதந்திரம் பெற்றுவிடும். நாடு துண்டிக்கப்பட்டதென்று கூறப்பட மாட்டாது பல துண்டுகளாகவே இருக்கின்ற காரணத்தால் !

மலேயாவில் கம்யூனிஸ ஒழிப்புத் திட்டம்

—(0)—

ஓயிட்ஹால் சம்மதம் பெற்று அமுல் நடத்தப்படுமாம்

சிங்கப்பூர், மே. 7— மலேயாவிலிருந்து கம்யூனிசத்தை அடியோடு ஒழிப்பதற்காக, இதற்காக நியமிக்கப்பட்ட விசேஷ அதிகாரி லெப் ஜெனரல் ப்ரிக்ஸ் ஒரு திட்டத்தை ஹைகமிஷனர் குர்னேயிடம் சமர்ப்பித்திருக்கிருர் என்று, ருேளுப் நிருபர் கூறுகிருர். இத்திட்டம்பற்றிய விவரங்கள் பரம ரகசியமாக இருக்கின்றன. இத்திட்டம் ஒயிட் ஹால் அனுமதி பெற்ற பின்பேதான் அமுல் நடத்தப்படும் என்று அவர் கூறுகிருர்.

கனடாவில் விபசார ஒழிப்பு இயக்கம்

ஆட்டவா, மே 7— கனடாவில் லாரென்ஸ் நதி ஓரப் பகுதியில் ஒரு சில ஆண்கள் கூடி, விபசார ஒழிப்பு இயக்கத்தை நடத்தி வருகின்றனர். விபசாரம் எங்கு நடக்கிறது என்று சந்தேகிக்கப்படுகிறதோ அவ்வீட்டு முன்பு பகுதியில் ஒரு பெரியசிலுவையை நட்டு, அதற்குத் தீ மூட்டி இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றனராம்.

இதுபற்றி விசாரணை செய்வதாக ஒன்டேரியோ போலீஸ் அதிகாரி உறுதியளித்திருக்கிருர்.

தென்மொலுக்கஸைச்சுற்றி முற்றுகை

இந்தோனேஷ்ய சர்க்கார் மிரட்டல்

ஜகர்தா, மே 6— சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்துகொண்ட தென் மொலுக்கஸ் குடியரசைச் சுற்றி "முற்றுகை" இட இந்தோனேஷியக் குடியரசு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மொலுக்கஸ் சர்க்கார் உடனே மண்டியிட்டு மன்னிப்புக் கோராவிட்டால், குடியரசுப் படைகள் கடல் மூலமாகவும், விமானமூலமும் மொலுக்களில் இறங்குமென்று இந்தோனேஷிய சர்க்கார் அதிகாரி ஒருவர் அறிவித்தார்.

ஆம்பன் என்னும் தீவுதான் தென் மொலுக்கஸ் தீவுகளில் முக்கியத் தீவாகும்.

இத்தீவிலிருந்துதான் இந்தோனேஷிய படைக்கு வேண்டும் ஆட்கள் பலம் தரப்பட்டுள்ளது.

மொலுக்கஸ் மக்களின் முக்கிய உணவுப் பொருள் அரிசி; அரிசிக்காக மற்றைய தீவுகளை நம்பி இருந்தாலும், சவ்வரிசியும், மீனும்சொந்த நாட்டில் ஏராளமாகக் கிடைப்பதால் இந்த முற்றுகை அவர்களை ஒன்றும் செய்யாது என்று கூறப்படுகிறது.

ஜப்பானில் பிரிட்டிஷ் யு. எஸ். ஜவுளி கோஷ்டி

[illegible] புனைட்டட் ஸ்டேட்ஸ் பிரிட்டிஷ் ஜவுளித் தொழில் அத கோஷ்டியினர், ஜப்பானிய ஜவுளி தொழில் தலைவர்களை சந்தித்துப் பேசுவர். ஜப்பானியர்களுடன் ஒத்துழைப்பதே பிரிட்டிஷ் நோக்கம் என்பதை, பிரிட்டிஷ் கோஷ்டித் தலைவர் ராய்மாண்ட் ஸ்டு— விளக்கியிருக்கிருர்.

ஜப்பானிய ஜவுளி முதலாளிகள் அமெரிக்க கோஷ்டியிடம் கதிர்களை மட்டும் பதுத்திவிருப்பது போதாதல்லவென்பதையும், அதிக கதிர்கள் உபயோகிப்பதை அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை சமர்ப்பிக்கவிருக்கின்றனர்.

மத்ய கிழக்குநாடுகளின் பாதுகாப்பு

லண்டன், மே. 7— வியாழனன்றுலண்டனில்ஆரம்பமாகும் மூவல்லரசு அயல் நாட்டு மந்திரிகள் மாநாட்டில், மத்ய கிழக்கு பாதுகாப்பு விஷயம் முக்யமாக விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

இம்மாநாட்டில் சமர்ப்பிப்பதற்காக மத்ய கிழக்கு நிலைமை பற்றிய ரிப்போர்ட் கேளைப் புள்ளிவிவரங்கள் முதலியன தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

அரபு நாடுகள் விஷயமாக என்ன கொள்கையைப் பின்பற்றுவதென்பது இதில் நிச்சயிக்கப்பட்டு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லண்டன், மே 7— ஒரு ஜெர்மன் சர்க்கஸ்காரர், ஹொர்ஸ்ட் பாக் மூன்று யானைகள், 35 குதிரைகள், ஒரு புலி இவைகளுடன் எப்படியோ ஸோவியத் ஜெர்மனிலிருந்து தப்பி பிரிட்டிஷ் பகுதிக்கு வந்துவிட்டார்.

கம்யூனிசத்தை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுமாம். அதே சமயத்தில்இந்த அமெரிக்க மேதைகள், ஏதோ சில லட்சியங்களை நிறைவேற்றப் போகிருர்களாம்! விந்தையான செய்தி.

அரசியல்லட்சியம்வளர்ந்த வரலாற்றை அறிந்தோருக்குத் தெரியும், கம்யூனிசமே அவனியின் அல்லல் தீர்க்கும் கடைசி மருந்து என்பது. இப்படிப்பட்ட நிலையிலே "இதோ மாற்று மருந்து" என்று, பொல்லாத மருந்தொன்றை புவியோருக்குக் காட்டுகிருர் அச்சீஸன். அந்த மாற்று மருந்தைக் கொடுத்து, மக்களை மயக்கி விடலாமென்ற எண்ணத்தோடு.

தாராளமாகத் தரட்டும்; ஆனல், கம்யூனிசம் என்னும் கைகண்ட மருந்தை முறிக்கும் பலம் அமெரிக்க முதலாளித்வத்துக்கோ, அதன் அடிவருடிகளுக்கோ உண்டா என்பதுதான் நாம் கவனிக்க வேண்டிய விஷயம்.

தோழர் அச்கீஸன் கிழக்கு நாடுகளுக்கு இதோபதேசம் செய்துகொண்டிருக்கும் இதே நேரத்தில்தான், இந்தோனேஷிய தீவுகளின் எழுச்சியை அடக்கமுடியவில்லையே என்று சிந்தித்து சித்தம் சோர்வடைகிறது இந்தோனேஷி[illegible] கலங்குகிறதுபிரான்ஸ்;பர்மாவின்நிலை பயங்கரமாகஇருக்கிறது. ஆஸ்திரேலிய கம்யூனிஸ்டு தலைவர், ஆஸ்திரேலிய சர்க்காரைப் பார்த்து 'உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்; ஆனல் கம்யூனிசத்தை அடக்கிவிடலாம் என்ற எண்ணத்தை மட்டும் கை விட்டுவிடுங்கள்' என்று. ஆணையிடும் அளவுக்கு அங்கும் கம்யூனிசம் வேரூன்ற ஆரம்பித்து விட்டது

இம்மாதிரிப் பார்த்துக் கொண்டே போனல், கிழக்காசிய நாடுகளின் வரலாற்று ஏடுகள் வேகமாகப் புரட்டப் பட்டு வருகின்றன என்பது புலனுகும்.

சென்றஆண்டு இருந்த நிலை இன்றில்லை; இன்றிருக்கும் நிலை நாளை இருக்குமோ என்றெண்ணவோ திடமில்லை! அவ்வளவு வேகத்தோடும் விவேகத்தோடும் பரவி வருகிறது பொதுவுடமைப் புரட்சித் தீ! அத்தகைய பெருந்தீயை அணைக்கத்தான்தோழர் அக்கீஸன் தண்ணீரைத் தெளித்துப் பார்க்கிருர். பார்க்கட்டும். பலன் என்ன என்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

இலங்கைக்கு அரிசி வருகிறது

கொழும்பு, மே 7— இன்னும் சில வாரங்களில் 13 கப்பல்கள் உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டுவந்து சேரும் என்றும், இவைகளில் 133000டன் அரிசி இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. இவைகளைக் கொண்டு ஆகஸ்ட் வரையில் கஷ்டமில்லாமல் காலந்தள்ள முடியுமாம்.

விலை ஏற்றத்தைத் தவிர்க்க பிரிட்டிஷ் பெண்கள் வழி கண்டுபிடித்துவிட்டனர்

—(0)—

அதிக விலை கேட்கப்படும் பொருள்கள் பகிஷ்காரம்!

லண்டன், மே. 7—

ஏகத்தாறுக பொருள்களின் விலை ஏறிக்கொண்டு போவதைக் கட்டுப் படுத்த, பிரிட்டிஷ் பெண்கள் ஒரு வழியைக் கண்டுபிடித்திருக்கின்றனர். விலைகள் ஏற்பட்ட பொருள்களை என்ன அவசியமானலும் வாங்குவதில்லை என்கிறஇயக்கத்தை அவர்கள், கட்டுப்பாடாக நடத்தி வருகின்றனர். இதனல் நல்ல பலன் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது.

இந்த இயக்கத்தைப் பிரிட்டிஷ் உணவு மந்திரிபாராட்டி, 'விலைவாசிகளைக் குறைத்துக்கொள்ள நீங்கள் வழி கண்டுபிடித்துவிட்டீர்களே' என்று புகழ்ந்து ஆசியை அளித்திருக்கிருர்.

மீன்கள் மீதிருந்த கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டவுடன் அதன் விலைகளை வியாபாரிகள் ஏகமாக உயர்த்திவிட்டனர்.

உடனே நாடெங்கிலுமுள்ள பெண்கள், மீன் வாங்குவதில்லை என்று பகிஷ்காரம் தொடங்கிவிட்டனர். இதனல் வியாபாரிகளுக்கு வியாபாரமே படுத்துவிட்டது, விலை மிகவும் இறங்கிவிட்டது.

காய்கறிகளின் விலைவாசிகளைக் குறைக்க இன்னும் கட்டுப்பாடான முறையில் இந்த இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது, வீட்டு வேலைகளை கவனிக்கும் பெண்களுக்கு இதற்காகவே ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர். இதில் 60,000 பெண்கள் மெம்பர்களாக இருக்கின்றனர்.

இவர்களின் அடுத்த இலக்கு லாண்டரியாக இருக்கும் என்று கூறப்படுகிறது—துணிகளை வெளுக்க பணம் ஏகமாக வாங்கப்படுகிறதாம்.

சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தில் தமிழ் இலாகா

மலேயா தமிழ்ப்பண்ணையின் கலாசார மாநாடு மூன்று நாள் நடந்து முடிவடைந்தது. சர்வ கலாசாலையில் தமிழ்மொழிக்கு தனி இலாகா ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டுமென்று மாநாடு வற்புறுத்தியது.

அந்த தமிழ் இலாகாவில் பயிலும் மாணவருக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதென்றும் இத்தமிழ்ப்பண்ணை முடிவு செய்தது.

புரட்சிக் கவிஞர் பிறந்த நாள் விழா

கொழும்பு, ஏப். 25—

23—4—50 ஞாயிறு மாலை கொழும்பு திராவிட முன்னேற்றக் கழக ஆபீஸில் 179 செட்டியார் தெருவிலுள்ள கழகப் பணிமனையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களது பிறந்தநாள் விழா தோழர் எஸ். சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புரட்சிக் கவிஞர் [illegible] உ. னவர் படத்தைத் [illegible]

[illegible] முதுமைப் பருவத்தின் நாட்டிலே, பாமரர்களின் உள்ளத்திலே உலவக்கூடிய உயிர்க்கவி, உண்மைக் கவி, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை ஆகும் என்றும், பாரதிதாசனின் பாக்களிலே, இனிமை மட்டுமல்ல எழுச்சியும் கலந்திருக்கிறதென்றும் பாரதிதாசன் தமிழ் வெறி உள்ளவர் என்று விளக்கிப் பேசியதோடு, இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு அவர்களது பாடப் புத்தகங்களிலே, பாரதிதாசன் அவர்களின் பாக்கள் இடம் பெறாமல் போனது மிகவும் வருந்தத்தக்கதென்றும், அக்குறையைக் களைய இலங்கைத் தமிழ் மக்கள் ஆவனசெய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொண்டார். அடுத்துத் தோழர் மா. இளஞ்சேரன் பேசினர். கூட்டம் இரவு எட்டு மணிக்கு இனிது முடிவுற்றது.

காஷ்மீருக்கு உல்லாசப் பிரயாணிகள்

சென்ற ஆண்டைப்போல 5 மடங்கு பேர் வந்தனர்

காஷ்மீர் ஸ்தல ஸ்தாபன மந்திரி பண்டித சியாம்லால் ஷாப் இன்று இங்கு பேசுகையில்,நேரு—லியாகத் ஒப்பந்தம், பெரும் மன நிம்மதியை ஏற்படுத்தும் என நம்புவதாகவும் ஏற்கனவே காஷ்மீருக்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் தொகை சென்ற வருஷத்தைவிட 5 மடங்கு அதிகமாக ஆகியிருக்கிறதென்றும் உல்லாசப் பிரயாணிகள்வசதிக்காக, விசேஷ பஸ் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றும் கூறினர்

இளைஞர் மன்றத் திறப்பு விழா

சென்னை பூந்தமல்லிக்கடுத்த முகலிவாக்கத்தில், இம்மாதம் 5-ந் தேதி மாலை 6-மணிக்கு இளைஞர் மன்றத் திறப்புவிழாப் பொதுக்கூட்டம் சிறப்புற நடந்தேறியது. உள்ளூர் பஞ்சாயத்துப்போர்டு தலைவர் தோழர்செல்லாவேலுபிள்ளை கூட்ட கோஷ்டியை எடுத்துரைத்தார். வேளூர் தோழர் ராமராஜும் அவர்கள் தலைமை வகித்து, கூட்டத்திற்கான அவசியத்தை எடுத்துரைத்தார்.

அடுத்தபடியாக தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கழகத்தைத் திறந்துவைத்து, இளைஞர் மன்றம் ஆற்றவேண்டிய தொண்டினை விவரித்துப் பேசினர்.

தோழர் டே. கோவிந்தசாமி அவர்கள் பேசுகையில் இளைஞர்கள் முக்கியமாக மக்களிடையேயுள்ள சமுதாய இழிவை ஒழிக்கக் கட்சி பேதமின்றி பாடுபடவேண்டுமென்பதை வற்புறுத்திக்கூறினர்.

கடைசியாக தோழர் என். வி. நடராசன் அவர்கள் இளைஞர்களும் குறிப்பாக கிராம மக்களும் தற்கால அரசியல் பிரச்னைகளை விவரமாக அவ்வப்போது அறிந்து ஆவனசெய்யவேண்டுமென்றும் எந்தக்கட்சி ஆட்சியிலிருப்பினும் அவ்வாட்சி மக்களின் நலனுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் மற்ற வகையில் நிர்வாகம் நடத்த வேண்டுமென்றும், கட்சி வெறியை மறந்து உண்மையான சமாட்சிக்கு, ஏழை எளியவர்களின் இன்னல்களைத் தீர்க்கும் வழி வகையில் சமதர்ம ஆட்சி முறையை நிறுவ இளைஞர்கள் பாடுபட வேண்டுமென்றும், மக்களிடையேயுள்ள மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்க தொண்டாற்ற [illegible] விளக்கமாகப் பேசி [illegible]

தலைவர் முடிவுரைக்குப் பின், செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

கள்ளத்தனமாக அரிசி கொண்டுவந்தவர்கள்

70-பேர் கைது

திருட்டுத்தனமாக அரிசி கொண்டுவந்ததாக 35 பெண்கள் உட்பட 70 பேர்களை போலீசார் கைது செய்திருக்கின்றனர். 642 படி அரிசி 8 படி ராகி முதலியவற்றை கைப்பற்றியிருக்கின்றனர்.

இந்த நாளியங்கள் நகரின் சுற்றுப்புறங்களிலுள்ள வெளியூர்களிலிருந்து வாருகொண்டு வரப்பட்டன. செம்பூர் ஒர்ஷாப் ஸ்டேஷனில் எதிரிகள் அரிசி மூட்டைகளுடன் ரயிலிருந்து இறங்கியபொழுது ஸ்டேஷனில் செக்ஷன் போலீஸ் இன்ஸ்பெக்டர் தோழர் ராஜகோபால் முதலியாரும் மற்றும் 7 சப்இன்ஸ்பெக்டர்களும் எதிரிகளைக் கைதுசெய்து, தானியங்களைக் கைப்பற்றியிருக்கிருர்கள்.

இனி நடப்பவை

திருவிதாங்கூர்:— சண்முகானந்தா புத்தகாலயத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் நாகர்கோவிலைச் சார்ந்த இரவிபுதூரில் 9 5-50-ல் கலைவாணர் தோழர் என்.எஸ். கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். விழாவில் தோழர்கள் கவிமணி தேசிகவிநாயகம், பக்தவத்சலம் டா. கிருஷ்ணமூர்த்தி, சோமயாஜுலு, சின்னஅண்ணாமலை, நத்தானியேல் ஆகியோர் கலந்துகொள்வர்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

		ரூ. அ. பை.
முன்வரவு		2115—6—6
தி. மு க.-விருதுநகர் கிளை		100—0—0
எம். எஸ். பி நாடார், விருதுநகர்		50—0—0
எஸ். எம். கே முருகையா,	,,	5—0—0
மு. சு சி. நாராயணசாமி,	,,	5—0—0
வா. அ. சங்கரபாண்டியன்,	,,	5—0—0
மு. இளஞ்செழியன்,	,,	5—0—0
குழந்தை வி. ஏ. எம். வி. சமரசம்,	,,	5—0—0
ப சி. அ. வணங்காமுடி,	,,	3—0—0
க. அண்ணுதுரை,	,,	3—0—0
மு. மாரிக்கனி,	,,	2—0—0
ஒரு அபிமானி (காங்கிரஸ் தோழர்)	,,	2—0—0
அ. ச. மாரியப்பன்,	,,	1—0—0
		2301—6—6

உருப்படாதத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் அடிப்படையாகத்தோன்றியது.

இத்தகைய பெரிய உண்மையை அடிப்படையாகக் கொண்ட உழவை வானெலி பிரசாரத்தின் மூலமும், பேச்சாலும், எழுத்தாலும் சாதித்துவிடலாம் என்று நினைப்பது பேதமையே.

பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களுமா உணவு உற்பத்தியைப் பெருக்கமுடியும்? இளைஞர்கள், உற்பத்திப் பெருக்க இயக்கத்தில் ஈடுபட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆம்; எப் பணிக்கும் இளைஞர்கள் தேவை தான் ஆனல், அந்தந்தத் தொழிலுக்கு அந்தந்தத் துறையில் பயிற்சி பெற்றோர் வேண்டாமா?

எனவே, உண்மையிலேயே உற்பத்திப் பெருக்கத்தில் இந்த ஆட்சியாளருக்கு நம்பிக்கை இருக்குமானல், இத்தகைய ஓட்டுப் பிரசாரங்களை கைவிட்டு, நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் புயலிலே சிக்கிச்சீரழியும் உழைப்பாளிகளை ஒன்று திரட்டி, தரிசு நிலங்களையெல்லாம் நஞ்சை நிலங்களாக்க முயல வேண்டும்.

அது மட்டும் போதாது, இதுகாறும் உழைத்து உழைத்து உருப்படியான பலன் காணுதிருக்கும் உழவர்களின் உள்ளத்தில் நம்பிக்கை என்னுமோர் நல்ல விதையை நட்டாக வேண்டும். செய்தார்களா? செய்கிறார்களா? செய்வார்களா? செய்வார்கள் என்ற நம்பிக்கைக்கேனும் இடம் தருவார்களா இந்த ஆட்சியாளர்?

இதற்கு மாருக, கிராமங்கள் தோறும் ஆட்சியாளரின் அடக்குமுறையன்றோ தாண்டவ மாடக் காண்கிறோம்! விவசாயிகளின் வேதனையை எழுத வேண்டுமானல் கை கூசுகிறதே! சொல்ல வாய் கூசுகிறதே! நினைக்க நெஞ்சு பதைக்கிறதே! நமக்குக் கிடைத்துவரும் தகவல்களிலிருந்து கிராமங்களில்கொடுங்கோலாட்சி நடப்பதாகவே நினைக்க வேண்டியிருக்கிறது.

இங்ஙனம், ஏர் பிடிக்கும் ஏழைகள் ஏங்கித் தவிக்கும் போது, அமைச்சர் குமாரசாமியார் போன்றவர்கள் இளைஞர் உலகிற்கு இதோபதேசம் செய்து பயன் என்ன? எழுதிப் பயனென்ன? பேசிப் பயனென்ன? எனவே வேண்டாம் இனியும் இப்படிப்பட்ட வெட்டிப் பிரசார வேலைகள். விவசாயிகளின் வேதனையைப் போக்க வழி தேடட்டும் ஆட்சியாளர்; உற்பத்திப் பெருகுகிறதா, இல்லையா என்று பார்ப்போம்!

மந்திரியார் அட்டகாசம்!

உத்திரப் பிரதேச மந்திரியார் ஒருவர் லக்னேவுக்கு 80 மைல் தொலைவிலுள்ள ஒரு பட்டிணத்துக்கு, ஒரு மாநாட்டைத் திறந்துவைக்க விமான மூலம் சென்றாராம். அவருடைய கார் அவரைத்திரும்பி அழைத்துக்கொண்டுவர காலியாக அங்கு கொண்டுவரப்பட்டது.

விமானம் இருட்டான பிறகு புறப்பட முடியாத காரணத்தால் விமானத்தைக் காலியாக அனுப்பிவிட்டு கார் மூலம் மந்திரியார் திரும்பி வந்தாராம்!

காட்டுப்பன்றியால் கொல்லப்பட்டார்

ஜேகர் தோட்டத்தில் மாமேரியான தமிழர் ஒருவர் காட்டுப்பன்றி ஒன்றால் கொல்லப்பட்டார்.

ஒரு நாய் குரைத்து அப்பன்றியை விரட்டியதாம். அதனுல் அப்பன்றி மூர்க்கமடைந்து மாமேரியைத் தாக்கிக் கொன்றது.

லாரி-ரயில்வண்டி மோதல்

ஒருவர் மரணம்

மயூர்பஞ் ரயில்வேயில் பூராணா ஸ்டேஷனை அடுத்த லெவல்கிராஸிங்கில் 175-வது நெ. டிரயினின் என்ஜின் மீது, ஒரு லாரி மோதியதால் லாரியின் டிரைவர் ஸ்தலத்திலேயே மாண்டார் மற்றவர்களுக்கு காயம் ஏற்படவில்லை.

அரிசி நெருக்கடி

உலக அரிசி நிலைமையை 'ஸ்டேடிஸ்ட்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை பரிசீலனை செய்து எழுதுகையில் குறிப்பிட்டிருப்பதாவது:—

அரிசி நிலைமை முன்பிருந்ததைவிட ஓரளவுக்கு அபிவிருத்தி யடைந்திருக்கிறதென்று சொல்லலாம என்ருலும், எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக அபிவிருத்தி என்று சொல்வதற்கில்லை.

கிழக்கோடியில் அரிசியையே உணவாகக் கொள்பவரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அத்துடன் சீனு, பர்மா, வியட்னும் ஆகிய இடங்களிலுள்ளநிலைமையால் அரிசி உற்பத்திப் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

சியாங் படையினர்

இந்தோ-சீனுவில் சரணுகதி

சியாங் ராணுவத்தின் சிறு கோஷ்டிகள் (சீன தேசியவாதிகளின் கோஷ்டிகள்) கம்யூனிஸ்ட் சீனுவிலிருந்து இந்தோ சீனுவிற்குள் தப்பி வந்து வண்ணமிருப்பதாக பிரெஞ்சு ராணுவ அறிக்கை ஒன்று கூறுகிறது. ஏப்ரல் 25-ந் தேதி சீன தேசிய ராணுவ கோஷ்டி ஒன்று ஹனுய்க்கு வடக்கே 110 மைலில் காவலில் வைக்கப்பட்டது. அக்கோஷ்டியினரிடமிருந்த ஆயுதங்களை பிரெஞ்சு சர்க்கார் வாங்கிக் கொண்டனர். மே மாதம் 4-ந் தேதி 50 சீன தேசியவாதிகள் காவலில் வைக்கப்பட்டனர்.

கழக நடவடிக்கைகள்

தேனி:— தி. மு. க. செயற்குழு கூட்டம் 26-4-50 அன்று தோழர் தேவராசன் தலைமையில் தோழர் கா. பெ. நாதன் இல்லத்தில் கூடியது. அதுபோது செயற்குழுவினை கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டது.

செயலாளர்:— அ. தேவராசன், துணைச்செயலாளர்:— ஆ. கருப்பையா, பொருள் உறுப்பினர்:— பொ. துரைராசு, விளம்பர உறுப்பினர்கள்:— மா. துரைச்சாமி, செ. அய்யப்பன். மாவட்ட உறுப்பினர்கள்:— மு. நாராயணசாமி, தி. செல்லையா. ஏனைய செயற்குழுவினர்:— கா. சிவகாமிநாதன், வேணுகோபால், மாடசாமி, எ. துரைராசு, கு. வெள்ளைச்சாமி. தோழர் மு. நாராயணசாமி நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

விருதுநகர்:— தி. மு. கழக செயற்குழுக் கூட்டம் 30—4—50 சாலை நாடார் பரிபாலன சங்கக் கட்டிடத்தில் தோழர் முருகையா தலைமையில் கூடியது. அதுபோது மத்திய கழகக் கட்டிட நிதிக்காக இக்கழக நிதியிலிருந்து ரூபாய் 100 அனுப்புவதென்றும், மேற்கொண்டு பொது மக்களிடமிருந்து நன்கொடை வசூல் செய்து அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

* * *

தேவாண்டலம்:— 1—5—50 காலை 8-30-க்கு தி. மு. கழகக் கட்டிடத்தில் தோழர் டி. பி. கேசவன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் கூடியது. அவ்வமயம் 28—5—50-ல் நமது கழகப் பேச்சாளர்களைக்கொண்டு ஓர் பொதுக் கூட்டம் நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது. இதற்காக சுற்றுப்பக்கமுள்ள கிளைக் கழக உறுப்பினர்களை தங்களாலான [illegible] செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

* * *

திருட்டிணகிரி:— தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் கூட்டம், 25—4—50 அன்று தோழர் கே. எஸ். எ. அன்வார் கமால் இல்லத்தில் தோழர் எம். சந்திரன் தலைமையில் கூடி கீழ்க்கண்ட தீர்மானங்களை ஒருமனதாக நிறைவேற்றியது.

தி. க. தலைமை நிலைய கட்டிட நிதியாக ரூ. 10-0-0 அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது.

இக்கழகத் துவக்கவிழாவினை விரைவில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்களை கொண்டு நடத்துவது. இக்கழக நிதிக்காக, சில கழகப்புத்தகங்கள் வெளியிடுவதென முடிவு செய்யப்பட்டது. தோழர் அன்வர்கமால் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

நாகர்கோவில்:—26-4-50 மாலை தோழர் எஸ். உத்தண்டன் அவர்கள் தலைமையில் தி. மு. க. கமிட்டி கூட்டம் நடைபெற்றது. முதலாவதாக, கடந்த கூட்ட நிகழ்ச்சிகள் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. அடுத்தபடியாக ந. தி. மு. க. தி. க. உறுப்பினர்களில் ஒருவராகிய தோழர் பி. கணபதி அவர்கள், நாஞ்சில் மாவட்ட கழகத் தோழர்களுடையவும், பொதுச் செயலாளர் தோழர் வி. எம். ஜான் அவர்களின் அனுமதி இல்லாமலும், 'அறப்போர்' என்ற தலைப்பின்கீழ் செய்தி வெளியிட்டமைக்காக அவர்மேல் இக்கமிட்டி ஒழுங்கு நடவடிக்கை எடுத்து 28-4-50 வெள்ளிமுதல் நகர திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்தும், மேற்படிக்கமிட்டியிலிருந்தும் காலவரையின்றி நீக்கி வைக்கிறது.

நாஞ்சில் மாவட்டத்தில் நமது கழகப் பிரசாரம் செய்வதற்கும், கிளைக்கழகங்கள் ஆரம்பிப்பதற்கும் அதற்கு ஆகும் செலவையும் இக்கமிட்டி ஒப்புக்கொள்ளுகிறது.

சோழபுரம்:— 1-5-50 தி. மு. க. செயற்குழு தோழர் சிவஞானம் தலைமையில் கூடி புதிய ஆண்டுக்காக மேற்படி கழகசெயற்குழுவை கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டது.

செயலாளர்:- பத்மநாபன்; துணைச் செயலாளர்:- வி துரைசாமி; விளம்பர உறுப்பினர்:- நீ. சீனிவாசன்; பொருள் உறுப்பினர்:- தி. கோபால்; ஏனைய செயற்குழுவினர்:— கு. நாராயணன், ராமானுசம், அ. ராமசாமி, பசுபதி, சிவஞானம், பி. கல்லுசாமி, சீனிவாசன், அருணாசலம், காஞ்சிரங்கால துரைசாமி.

* * *

தாத்தையங்கார்பேட்டை :— தி. மு. க. செயற்குழுக்கூட்டம் 1-5-50 அன்று கூடியது. அதுபோது நமது இயக்கத்தின் நீண்டநாள் தொண்டரான தோழர் இராமநாதன் அவர்கள் 29-4-50ல் திடீரென இறக்கை எய்தியமைக் கேட்டு, இக்கமிட்டி வருந்துவதோடு, அன்னார் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டு முடிவுற்றது.

* * *

கோவைமுத்தூர்: —9-வது வட்ட தி. மு. க கிளையின் செயற்குழுக் கூட்டம், 30-4-50- மாலை தோழர் அ. அ. லிங்கன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் வே. ஆ. நாகலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். 9-4-50-ல் நடைபெற்ற துவக்கவிழா வரவு செலவு கணக்குகள் பரிசீலனை செய்து, ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், பின்வரும் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

தன் கடைசி மூச்சு காற்றில் கலக்கும் வரை, இடையறாது, இலட்சியத்திற்காகவே உழைத்து உயிர் நீத்த மாவீரன் அழகிரிசாமிக்கு, இக்கூட்டம் தன் வணக்கத்தையும் மரியாதையும் தெரிவித்துக் கொள்கிறது.

கோவை மா. வ. தி. மு. கழகத்திற்கு, 9-வது வட்ட தி. மு. கழகத்தின் பிரதிநிதிகளாகத் தோழர்கள் வே. ஆ. நாகலிங்கம், நா. அ. சந்தானம் ஆகிய இருவரையும் அனுப்புவதென முடிவு செய்வதுடன், அவர்களைப் பிரதிநிதிகளாக ஏற்றுப் பதிவு செய்துகொள்ளுமாறு மாவட்டக் கழகத்தைக் கேட்டுக் கொள்கிறது.

தி. மு. கழகத் தலைமை நிலையக் கட்டிட நிதிக்காக ரூபாய் பத்து அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது. பின்னர் செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிவுற்றது.

திருடர்களை வசப்படுத்த நடிகையின் யுக்தி

ஜிஸில் ரொண்ட்பர் என்கிற பிரெஞ்சு நடிகையின் வீட்டில், திருடர்கள் வந்து கொள்ளையடிக்காமல் இருக்க ஒரு நூதன முறையைக் கையாள்கிறள்.

ஒவ்வொரு இரவும் அவள் நாடகமாடப் போகும்போது, வாயிற்கதவில் ஒரு கவரில் இரு தினசரி டிக்கெட்டுகளை வைத்து விட்டு 'இன்று' திருடன் என் [illegible] என்ற நாடகத்தில் நடிக்கிறேன் அவசியம் வந்து பாருங்கள் என்று கடிதம் வைத்துவிட்டுப் போவது வழக்கமாம்.

இதனால் திருடர்கள் அவள் வீட்டில் கொள்ளையிடுவதே இல்லை. —குனோப்

செங்கற்பட்டு மாவட்ட

தி. மு. கழக அமைப்புக் கூட்ட அழைப்பு

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் ஒன்று 19—5—50 வெள்ளி மாலை ஐந்து மணிக்கு, காஞ்சிபுரம் "திராவிட நாடு" நிலையத்தில் நடைபெறும்.

மேற்படி மாவட்டத்தில் இது வரை அமைத்துள்ள கிளைக் கழகங்கள் ஒவ்வொன்றிலிருந்தும், இரண்டு பிரதிநிதிகள்வீதம் தேர்ந்தெடுப்பதுடன் அப்பிரதிநிதிகள் அனைவரும் மாவட்டத் தேர்தல் கூட்டத்தில் தவருது கலந்துகொள்ளும் வகையில், செங்கற்பட்டு மாவட்ட கிளைக் கழக நிர்வாகிகள் உடன் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

குறிப்பு:—செங்கற்பட்டு மாவட்ட கிளைக் கழகங்களின் பிரதிநிதிகளின் பெயர்கள், விவரம் முதலியவைகளையும் எனக்குக் கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறேன்.

என். வி. நடராசன்
செயலாளர்
அமைப்புக் குழு
தி. மு. கழக தலைமை நிலையம்

கள்ளக் காதலுடன் ஓட்டம்

16 குழந்தைகளையும் கூடவே கூட்டிச் சென்றனராம்

மனைவியை இழந்த ஒருவரும், மணமான ஒரு பெண்ணும் ஒருவரை ஒருவர் காதலித்தனர். இருவரும் ரகசியமாக ஓடிவிடுவதென திட்டம் போட்டனர்.

அந்தச்செ[illegible] லனின் [illegible] காதலி[illegible] குழந்தைகளையும் அவர்கள் தங்களுடன் ஒரு வானில் திணித்து கூட்டிச் சென்றனர். இம்மாதிரி குழந்தைகளை திணித்து அழைத்துச்செல்வதை ஆட்சேபித்து போலீஸார் அவர்களைத் தடுத்து நிறுத்திவிட்டனர்.

மாபெரும் நீர்வீழ்ச்சி

3212 அடி உயரத்திலிருந்து விழும் மாபெரும் நீர்வீழ்ச்சி வெனிஸுலாவில் இருக்கிறது. இது மிகப் பெரிய நீர்வீழ்ச்சி என்று கருதப்படும் நயாகராவை விட 19 மடங்கு பெரியதாம்.

'இப்படித்தான் செய்தேன்'

கோர்ட்டில் மண்டை உடைந்தது

லண்டன், மே 7—

வடரொடீஷியாவில் லுஸாகா என்ற இடத்தில் ஒரு ஆப்பிரிக்கர், மற்றொருவரை தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்டு, அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. மாஜிஸ்திரேட் ஒரு மொழி பெயர்ப்பாளர் உதவி மூலமாக 'அன்று என்ன செய்தாய்' என்பதை செய்து காட்டென்று எதிரியைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரிடம் ஒரு சுத்தி கொடுக்கப்பட்டது.

எதிரி தன் பக்கத்திலிருந்த மொழிபெயர்ப்பாளரின் தலையில் சுத்தியால் ஓங்கி அடித்து, அன்றும் இப்படித்தான் செய்தேன் என்றார். இதன் பலனாக அம்மொழி பெயர்ப்பாளர் இப்பொழுது ஆஸ்பத்திரியில் இருக்கிறார்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

9 - 5 - 50

திருத்துறைப்பூண்டி :—சி. பி சிற்றரசு.

10 - 5 - 50

எரிசினம்பட்டி :—ஜி என். இராஜு.

டிரிகெவ் லி மாஸ்கோ போகு முன்...?

ஜினிவா, மே 7—

ஐ. நா. காரியதரிசி தோழர் டிரிக்வலி ஆம்ஸ்டர்டாமிலிருந்து இங்கு வந்து சேர்ந்திருக்கிறார். செவ்வாயன்றுதான் மாஸ்கோ செல்ல உத்தேசித்திருப்பது குறித்த முழு விவரங்களையும் நிருபர்களிடம் வெளியிடுவதாக அவர் கூறியிருக்கிறார்.

ஐ. நா. பொருளாதாரக் கமிஷனின் காரியதரிசி கன்னார் மிர்டல் என்பவரை லீ முன்னதாகவே மாஸ்கோவுக்கு அனுப்பியிருக்கிறார்.

இருவருமாக சேர்ந்து மிரட்டல் யுத்தத்தை நிறுத்துவதற்கான சமரச வழிகளைத் தேடுவர் என்று தெரிகிறது. இதன் காரணமாக கிழக்கு மேற்கு வர்த்தக உறவும் சீர்படலாம்.

தொழிலாளர்கள் பலருக்கு வேலையில்லை

ரோம், மே 7—

இதாலி வாங்கவிருந்த சோவியத் [illegible] நியாயமான விலையை [illegible] தொழிலாளர்கள் வேலையற்[illegible]னர். கோதுமைக்கான விலையை கப்பல்களாகக் கட்டிக்கொடுக்க இத்தாலி சம்மதித்திருந்தது.

ஸிரனெய்காவுக்கு படை

லண்டன், மே 7—

உள்நாட்டுப் பாதுகாப்புக்காக ஒரு சிறு படையை ஸிரனெய்கா வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற அமீர்லென்னுஸி கோரிக்கையை, பிரிட்டிஷ் சர்க்கார் அங்கீகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

ஜனத்தொகைக்கு ஏற்ற விகிதாசாரத்தில் இப்படை அமைக்கப்படும் என்றும் இதற்காக ஒரு பிரிட்டிஷ் அதிகாரி அனுப்பப்படுவார் என்றும் தெரிகிறது.

விவசாயத்தில் விமானங்களின் உதவி

லண்டன், மே 7—

விவசாயத்துறையில் விமானங்களை எப்படிப்பயன்படுத்தலாம் என்பதுபற்றி, பிரிஸ்டல் விமானக் கம்பெனி ஒன்று ஆராய்ச்சிகளைச் செய்துவருகிறது.

எருக்களை பூமியில் வாரியிறைப்பது, விதைகளைத்தெளிப்பது முதலிய வேலைகளை மிகவும் உயரமான மலைப்பிரதேசப் பகுதிகளில் விமானங்களைக்கொண்டே செய்வது வசதியாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

20 அடி உயரத்தில் விமானம் பறந்து கொண்டே ஒரு ஏகரில் 10 பவுண்ட் விதைகளைவாரியிறைத்திருக்கிறது. இம்முறையால் விவசாயத்திற்காகும் செலவு குறைவு படுகிறதாம்.

[illegible]-மணி நேரத்தில் ஒரு விமானம் 700 ஏக்கர்களுக்குஎருபோட்டு, விதை தெளிக்கமுடியும் என்று தெரிகிறது.

ஆசிரியருக்கு முடங்கல்

களம்புகுவோம்

ஐயா,

30—4—5—ல் "தினத்தந்தி" 'இந்தி தெரிந்தவர்களுக்குத்தான் தபால் நிலையங்களில் வேலை கிடைக்கும்" என்ற தலைப்பு கொடுத்து எழுதி இருந்தது. எனது நண்பர் ஒருவர் R. M. S. Packer வேலை செய்து வருகிறார். 10-ம் தேதி அவர்களுக்கு இந்தி பரிஷை உண்டாம். அவர்களுக்குச் சாதாரணமாக இப்போது கொடுக்கும் சம்பளம் ரூ. 75 தான் ஆனால், இந்தி பரிஷையில் தேறிவிட்டால் அப்போது சம்பளம் ரூ. 92 ஆக உயர்த்தப்படுமாம். இது உண்மையாக இருக்குமானால்—வடநாட்டு மொழியைக் கற்றுக்கொண்டால் ரூ. 17 அதிகம் என்றால், தாய்மொழியான தமிழைக் கற்றுக்கொடுக்க எந்த முறையைக் கையாளப்போகிறார்கள் கனம் மந்திரிமார்கள்? தமிழர்கள் சொல்லளவில், எழுத்தளவிலும். [illegible] அறிந்த வடவர் தங்கள் திட்டத்தை எவ்வளவு சீக்கிரத்தில் செயலில்காட்ட முனைந்துவிட்டார்கள். சென்னை தலைமை தபால் நிலையத்தின் பெயர் முதலில் இந்தியில், இரண்டாவது ஆங்கிலத்தில் எழுதப்பட்டு கன்னித் தமிழை கடைசியில் ஒதுக்கியுள்ளனர். தன்மானமுள்ள தமிழன் இதைக் கண்டு [illegible] புதி[illegible] அடைகிறது. ஒரு ஜாதியினருக்கே உரித்ததாக உரிமை பாராட்டப்படும் சௌகார் பேட்டையில், தனித் தனியான இடம்—தனித்தனியாக ஆசிரியர், இந்தி கற்பிக்கப்படுகிறது மக்களுக்கு அவர்களது இல்லங்களிலேயே. தமிழனை உணர்ச்சியற்ற மரக்கட்டை எனத் தட்டிப் பார்க்க எண்ணுகின்றனர் வடவர், அவர் கைகட்டதும் அவன் தன்னிலெழுந்து களம் புகுவது எக்காலமோ? அக்காலம் அதிவிரைவில் வரும்.

வானொலியில் இந்தி, புகைவண்டி நிலையத்தில் இந்தி, தபால் நிலையத்தில் இந்தி, கழகங்களில் இந்தி, தனிப்பட்ட ஒருசாரர் முயற்சியினால் இந்தி 'இப்படியாக சர்வம் இந்தி மயமாக்கப்படுகின்றது. இந்த நிலையில் தமிழர்களான நாம் என்ன செய்யப்போகின்றோம்? "தமிழ் நமது தாய்மொழி. அதைக் காப்பதே நமது கடன்" எனக் கூறிக்கொள்வோம். நமது குனிந்த கண் நிமிரும்—தளர்ந்த தசை உறுதிபடையும்-குருதி கொதிக்கும் நமது தாய் மொழியைக் காப்பாற்றச் சச்சைக்கட்டுவோம்— களம் புகுவோம்—வெற்றி கொள்வோம்

வணக்கம்,

சென்னை 4—5—50 } தி. பாஷ்யம்

கவரைஒட்ட இயந்திரம்

கவரை நக்கி ஒட்ட நாக்குள்ள ஒரு இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இது இவ்வாண்டு கைத்தொழில் கண்காட்சியில் இடம் பெறுமாம்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street. Madras-1.